# அளுத்தோயாவில் கண்ணி வெடி 7 படை பலி;

## ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

அளுத்தோயாவில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளால் பலரக ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள அளுத்தோயா இராணுவ முகாமில் இருந்து ரோந்துப் பணிக்காக நேற்றுக் காலை 6.30 மணியளவில் புறப்பட்ட இராணுவ வாகனமொன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்த இராணுவ வாகனத்தில் பத்துக்குமேற்பட்ட இராணுவத்தினர் பயணம் செய்ததாகவும் அதில் ஏழுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், இருவர் படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ௵ ஐப்பசி மீ 09 உ வெள்ளிக்கிழமை (26-10-1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 06 ஓசை 241

## தெல்லிப்பழை உ. அ. அதிபர் பணிமனை உடுவிலில்

சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உடுவிலுக்குஇடம்பெயர்ந்துள்ளது. நேற்று இடம் பெயர்ந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவையும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவையும் யாழ். அரச அதிபர் அன்ரன் அல்பிரட் சென்று பார்வையிட்டார். அத்துடன் தெல்லிப்பழையிலிருந்துஇராணுவஅச்சுறுத்தல்கள் காரணமாக(4ஆம்பக்கம் பார்க்க)

### மதத்தால் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரிக்கும்

# சிங்களவர் சூழ்ச்சி வலையில் முஸ்லிம் தலைமைகள்

### திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் தெரிவிப்பு

(திருக்கோணமலை)

இலங்கைத் தீவின் தெற்கிலும், மேற்கிலும் உள்ள சிங்கள அரசியல்வாதிகளின் இனவாதம் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் மதத்தால் பிரிக்க முயல்கின்றது. இதற்கு முஸ்லிம்களின் முதலாளித்துவ அரசியல் தலைமைகளை சிங்களவர்கள் தற்காலிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். இதை முஸ்லிம்கள் உணர வேண்டும். இவ்வாறு நேற்று முன்தினம் ஈழநாதத்திற்கு அளித்த விசேட செவ்வியில் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய இராணுவம் இங்கு இருக்கும்வரை வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்த சிறிலங்கா அரசு, இந்திய இராணுவம் வெளியேறியதும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதிலும், சிங்கள உயர் அதிகாரிகளை நியமிப்பதிலுமே கண்ணாக இருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஹென்றி வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற நேரடி மோதலில் காயமடைந்த மேஜர் ஹென்றி நேற்று முன்தினம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

விரைவில்

"உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்"

14-09-90 முதல் 24-10-90 வரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயாவுடன் கிழக்கு மாகாணம் சென்று திரும்பிய போராளி ஒருவரின் பயண அனுபவங்கள்.

## அம்பாறையில் பல இடங்களில் புலிகள் இராணுவம் மோதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் வட்டமடு என்ற கிராமத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினரின் வாகனங்கள் இரு இடங்களில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது. கடந்த வியாழன் அன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

கடந்த வாரத்தில் அம்பாறை மாவட்டத்தில் மேலும் இரு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வெள்ளியன்று தங்கவேலாயுதபுரம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்டு பல மணிநேரம் நீடித்த தாக்குதலின்போது கனரக வாகனம் முற்றாகச் சேதமா

(4ஆம் பக்கம் பார்க்க)

## காவல் அரண்களை விட்டு வீடுகளில் பதுங்கும் படையினர்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் காவல் முகாம்கள் அமைத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரில் பலர் இரவு வேளைகளில் பொதுமக்களின் வீடுகளில் தங்குவதாகத் தெரியவருகிறது.

வவுனியாவில் வைரவர் புளியங்குளம், யூசிகுவாட்டர்ஸ், குடியிருப்பு ஆகிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களின் கால் இழப்பு கிழக்கில் தொடர்கின்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கிய சிறிலங்கா இராணுவத்தினர் பலர் தமது கால்களை இழந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை சித்தாண்டி என்ற இடத்தில் ஒரு சிப்பாயும், கோறாவெளியில் ஒரு சிப்பாயும் கடந்த சனிக்கிழமை சந்திவெளி என்ற இடத்தில் ஒரு சிப்பாயும் புலிகளின் மிதி வெடியில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளனர். (க)

## புலிகளுடன் பேச்சு நடத்த இரத்நாயக்க வேண்டுகோள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட விதிகளை நீடிப்பது சம்பந்தமான விவாதம் நேற்று இடம் பெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கே. பி. இரத்நாயக்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி கேட்டுக் கொண்டார். இதேவேளை சரத்சந்திரராஜகருணா பேசுகையில் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை தாம் ஏற்கப் போவதில்லை எனத் தெரிவித்தார். தினேஷ் குணவர்த்தனா பேசுகையில்காணாமற் போனவர்கள் பற்றிய விசா

(4ஆம் பக்கம் பார்க்க)

### அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு

## குண்டு வீச்சு அனர்த்தங்கள் பற்றி யாழ். அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் யாழ். குடாநாட்டிற்குள்ளும் தீவுப் பகுதியிலும் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சால் ஏற்பட்ட சேதவிபரம் பற்றியும், அதனால் யாழ். மாவட்ட மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலை குறித்தும் யாழ். அரசஅதிபர் அன்ரன் அல்பிரட் நேற்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் சரித்த ரத்வத்தையிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்று மதியம் ஒன்று முப்பது மணியளவில் ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் உயர்ஸ்தானிகர் ஆலயத்தில் உள்ள வானொலி தொலைத்தொடர்பு கருவி மூலம் கொழும்புடன் தொடர்பு கொண்டபோது சரித்த ரத்வத்தை யாழ். அரச அதிபருடன் பேசினார்.

அச்சமயமே யாழ். அரச அதிபர் இவ் விடயங்களைத் தெரிவித்தார். மேலும் இத்தொடர்பின்போது யாழ். மாவட்ட நிலைமை குறித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வித் திணைக்கள செயற்பாடு மந்த கதியில் நடைபெறுகிறது

(வவுனியா)

வவுனியா கல்வித் திணைக்களம் இயங்க ஆரம்பித்துவிட்ட போதிலும், அதன் செயல்பாடுகள் மிக மந்த கதியிலேயே இயங்குவதாக அறியப்படுகிறது.

மேற்படி கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களில் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்திருந்த போதிலும் அவர்கள் அனைவரும் இராணுவத்தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தொடர்பு கொள்ளவும்

வேலைகள் நடைபெறுகின்றன. தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய எம்மை நாடுங்கள். என்றும் மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்கள். ஸ்ரீலங்கா அச்சகம், 234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (R/765)

கீழ்க்காணும் முகவரியில் மீண்டும் வியாபாரம் நடைபெறுகிறது. எம்மிடம் கயிறு வகைகள் பெற்றுக் கொள்ளலாம். சித்தி விநாயகர் ஸ்ரோஸ், 117 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம், (நாச்சிமார் கோயிலடி)

(R/767)

### தவறிவிட்டது

சோமசுந்தரம் சற்குணராசா என்பவருடைய அடையாள அட்டை இல. 650061900V பெருமாள்கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் 32/1 நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்னும் முகவரியில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/764)

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1527)


வவுனியாவில்

# உழுந்துப் பயிர்ச்செய்கைக்கு "போறாட்" உதவி வழங்குகிறது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் விவசாயக் குடும்பங்கள் உழுந்துப்பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதற்கு 'போறாட்' நிறுவனம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

இத்தகவலை வவுனியா, 'போறாட்' திட்ட இணைப்பாளர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

வவுனியா சிற்றூர் அவைகளின் ஒத்துழைப்புடன் வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் 2, 000 குடும்பங்களும் வவுனியா நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ்வாழும் 1,500 குடும்பங்களும் நன்மைபெற உள்ளதாகவும்இக்குடும்பங்கள்ஒவ்வொரு ஏக்கர் உழுந்துப் பயிர் செய்வதற்கு விதை உழுந்தும், பயிர் செய்யப்படும் உழுந்து அறுவடையாகும் வரை மேற்படி குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியகுளம் என்ற இடத்தில் நேற்று தேடுதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர்ஆரையம்பதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பூபதிப்பிள்ளை (வயது 40) என்ற தமிழரை சுட்டுக் கொலை செய்துள்ளனர். (க)

## அதிபர் நியமனம்

இரண்டாந்தர அதிபர் பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும் எனவும், இத்தினத்தில் வருகை தராதோரின் நியமனக் கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும் எனவும் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (மு)

# சம்பளம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

வடபகுதியில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் கடமை ஆற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஆனி மாதத்திற்குப்பின் இன்றுவரை வேதனம் வழங்கப்படவில்லை.

அனைத்து நீதிமன்றங்களிலும் கடமை ஆற்றும் ஊழியர்களுக்கு இம்மாதம் உட்பட நான்கு மாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை.

இவர்கள் நான்குமாத வேதனமும் இன்றிப் பலத்த சிரமத்தின் மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்துவதாக அங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவர் எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார். (24)

# பாட விதானங்கள் மீள்ஒழுங்கு பற்றிய விசேட கருத்தரங்கு

(அலுவலக நிருபர்)

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளில் இழந்த கற்கை நாட்களை ஈடு செய்வதற்காக பாடவிதானத்தை மீள் ஒழுங்கு செய்வதற்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் திங்கடகிழமை காலை எட்டு மணிக்கு யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ்விசேட கருத்தரங்கிற்கு தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகவியல், தொழில் நுட்பப்பாடங்கள், வர்த்தகம், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், சங்கீதம், சித்திரம், நடனம், சமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டுமென யாழ். கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார்.

அத்துடன் விசேட பாடங்களுக்கான கல்வி அதிகாரிகள் வள ஆளணியினராகக் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது. (மு)

தீவுப்பகுதியில்

# விவசாயச் செய்கையும் பாதிப்படைந்துள்ளது

(ஊர்காவற்றுறை)

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மண்டைதீவு பகுதி மக்கள் இம்முறை விவசாயச் செய்கையாலும் பாதிப்பேற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

முன்பு இராணுவம் மண்டைதீவில் தங்கிய காரணத்தினால் அங்கு பெரும்போக நெற்செய்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. ஆனால் தற்போது பெருமழை பெய்துள்ளதனால் வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது காலம் தாழ்த்தி நெற்செய்கையில் ஈடுபட்டால் பின்னர் மழை இல்லாது போய் விட்டால் பயிர்கள் கருகி நாசமாகி விடக்கூடுமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (15)

## சமுகம் தரவும்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சகல வெளிக்கள ஊழியர்களும் நாளை காலை பத்து மணிக்கு தாவடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சமுகம் தருமாறு மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி வேண்டியுள்ளார். (க)


— எமது புதிய வெளியீடுகள் —

1. ரஜனியின் ''அதிசயப்பிறவி''
2. ராம்கியின் ''இணைந்த கைகள்''
3. விசுவின் ''வரவு நல்ல உறவு''
4. விஜயகாந்தின் ''சந்தனக் காற்று''
5. சத்தியராஜின் ''மதுரைவீரன் எங்க சாமி''
6. விஜயகாந்தின் ''சிறையில் பூத்த சின்னமலர்''
7. சத்தியராஜின் ''வேலை கிடைச்சிருக்கு''
8. ரகுவரனின் ''புரியாத புதிர்''
9. சிவகுமாரின் ''நியாயங்கள் ஜெயிக்கட்டும்''
10. ரேவதியின் ''48 மணிநேரம்''
11. சீதாவின் ''பொலீஸ் மனைவி''
12. பார்த்திபனின் ''தாலாட்டு பாடவா''
13. ராமராஜனின் ''தங்கத்தின் தங்கம்''
14. விஜயகாந்தின் ''எங்கிட்ட மோதாதே''
15. கார்த்திக்கின் ''கன்னிராசி''
16. கார்த்திக்கின் ''கிழக்கு வாசல்''

அனைத்தும் ''ஒறிஜினல்'' பிரதிகள்

எமது ஸ்தாபனம் காலை 9-00 மணி முதல் நண்பகல் 1-00 மணிவரை திறந்திருக்கும்.

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (R. 766)



## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுசங்கம் தகவல் சேகரிப்பு நிலையம்

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக எமது பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக ''தகவல் சேகரிப்பு நிலையம்'' ஒன்று தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ''குறித்த நிலையத்தில்'' எமது பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது அகப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள், இறந்தவர்கள், வேறு விதமான இழப்புக்கு, பாதிப்புக்கு உள்ளானோர் பற்றிய விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

25- 10- 1990
(B/1528)



## இரண்டாம் ஆண்டு நினைவு அலைகள்



சின்னத்துரை சற்குணராஜா
(ராஜன் கபே அன் கூல்பார் உரிமையாளர்)

அன்னையின் மடியில் 12-11-1945
அரக்கர் பிடியில் 18-10-1988

திதி: 26-10-90

''எம் இதய குலவிளக்குமானீர்
எல்லோர் நெஞ்சிலும் நிறைந்திருந்தீர்
மண்ணின் மைந்தர்க்கு துணையுமானீர்
துரோகிகளின் துப்பாக்கிக்கு இலக்குமாகி
இரண்டு வருடங்களானாலும்
எம் இதயமெல்லாம் நிறைந்திருப்பீர்''

சந்தையடி, மானிப்பாய்.
மனைவி, பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

B.1530



## நல்லூர் பாம் சென்ரர்
NALLUR FARM CENTRE

எம்மிடம் PRIMA கோழித்தீன் வகைகள், மாட்டுத்தீன், பிண்ணாக்கு மற்றும் கால்நடை மருந்து வகைகள், மாட்டுக்குத் தேவையான கல்சியம் (CALCIUM) என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

(R/ 763)



உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு

- வீட்டு மின்னிணைப்புகள்
- பிளம்பிங் வேலைகள்
- வெல்டிங்
- மோட்டர் றிவைன்டிங்

மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்

41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.

பதிவு இல. 4376.

(B/1481)

## சிந்தனைக்கு

மனிதர்களை உருவாக்குவது உதவிகள் அல்ல; தடைகள்தான். வசதிகள் அல்ல; சிரமங்கள்தான்.

— வில்லியம் மேத்யூஸ்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 26-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# கவனத்திற்குரிய அறிவிப்பு

சிறிலங்கா அரசாங்கத்தால் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், படுகொலைகள் நிகழ்த்தப்படுவதாகவும் இந்த நிலை தொடருமானால் சிறிலங்கா அரசிற்கு வழங்கப்படும் நிதி, மற்றும் தொழில்நுட்ப உதவிகள் நிறுத்தப்படும் எனவும் ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகள் சிறிலங்கா அரசை எச்சரித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்துவரும் உத்தியோக பூர்வமான முதலாவது கண்டனக் குரலாகும். இதற்கு முன்னர் இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் பற்றி அரச சார்பற்ற மனித உரிமைகள் ஸ்தாபனங்களும், மத ஸ்தாபனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும், கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. தற்பொழுது காலம் கடந்தாவது மேற்கு ஐரோப்பிய அரசாங்கங்களின் கண்களில் இலங்கையில் நடக்கும் படுகொலைகள் பட்டுள்ளது என்பது சிறிது மகிழ்ச்சி தரும் விடயம் தான். அதுவும் பாரிஸில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஆரம்பிக்க ஓரிரு நாட்கள் இருக்கும் வேளையில் இந்த அறிவிப்புக்கள் வெளிவந்துள்ளமை மேலும் விரும்பத்தக்கதாகவுள்ளது.

இவைஒருபுறமிருக்ககாலத்திற்குக்காலம் இலங்கையில் இனப்படுகொலைகள் இடம் பெற்று வந்தாலும் 1983 ஆம் ஆண்டிலிருந்து இனப்படுகொலைகள் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்டபோதும் தற்பொழுதுதான் இப்படுகொலைகள் கண்களில் படுகின்றதென்றால் இதற்கு மனித நேயம் தான் முழுமையான காரணமா? அல்லது வேறு ஏதாவது காரணங்களும் உண்டா?

ஏன்? இவ்வாறுசந்தேகிக்கத்தோன்றுகின்றதென்றால் கடந்த காலத்தில் ஐரோப்பியபொருளாதாரச் சமூகம் சிறிலங்காவினால் ஏமாற்றப்பட்ட செய்திகள் இப்பொழுதுதான் வெளிவரத் தொடங்குகின்றன. எடுத்துக்காட்டாக மொஸாட் உளவாளியான ஒஸ்த் ரோவ்ஸ் எழுதிய நூலில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு வழங்கிய நிதி எவ்வாறு ஆயுதங்கள் வாங்குவதற்குப் பயன்பட்டன என்ற விபரம் வெளிவந்துள்ளது இந்த மகாவலித் திட்டத்திற்கு பெரும்பாலும் உதவிகளை வழங்கிய நாடுகள் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தைச் சார்ந்தவையாகும். ஆகையினால், சிறிலங்கா தம்மை ஏமாற்றியது இந்த நாடுகளுக்கு சிலவேளைமனஎரிச்சலை ஊட்டியிருக்கலாம்.

அதேவேளை ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் தெரிவிக்கும் கண்டனங்கள் மட்டும் எமது பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. ஏனெனில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், அணிசேரா நாடுகள், காமன்வெல்த் நாடுகள் போன்ற எந்தவித அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் எவற்றையும் அடக்குமுறை ஆட்சியாளர்கள் கருத்திற் கொள்வதில்லை. அத்தோடு தீர்மானங்களை நிறைவேற்றும் நாடுகளே தீர்மானங்களுக்கு விசுவாசமாக நடப்பதும் இல்லை.

இன அடக்குமுறையை மேற்கொள்ளும் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின்மீது ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், அணிசேரா நாடுகள், காமன் வெல்த் நாடுகள் போன்ற சகலஅமைப்புக்களுமே பொருளாதாரத் தடையை விதித்தன. ஆனால் அப்பொருளாதாரத் தடை எதுவும் தென் ஆபிரிக்காவைப் பெரியளவில் பாதிக்கவில்லை. ஏனெனில் தென் ஆபிரிக்காவில் பல பொருளாதார நலன்களை இந்த அமைப்புக்களில் உள்ள நாடுகள் கொண்டுள்ளமையே. உதாரணமாக ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், காமன் வெல்த் கூட்டமைப்பு என்பனவற்றில் அங்கம் வகிக்கும் முதன்மையான நாடுகளில் ஒன்றான பிரிட்டன் தென் ஆபிரிக்காவில் பெரும்பாலான பொருளாதார நலன்களைக் கொண்டுள்ளதோடு பலகோடி ரூபா முதலீட்டையும் செய்துள்ளது.

இவ்வாறாக இந்த அமைப்புக்களில் உள்ள நாடுகள் கொண்டுள்ள முரண்பாடான தமது நலன் சார்ந்த கொள்கைகளினால்இந்நாடுகள் வெளியிடும்கண்டனங்கள், மேற்கொள்ளும் தீர்மானங்கள் பெரிய அளவினதான நன்மை எதையும் அடக்கப்படும் மக்களுக்குக் கொடுக்கப் போவதில்லை.

இருப்பினும், இலங்கையில் இன ஒடுக்குமுறை நடைபெறுகின்றது என்பதும், அங்குள்ள மக்கள் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது மட்டுமாவது வெளிவருவது எம்மைப் பொறுத்தவரையில் ஆறுதலைத் தரவல்லதே.

# புலியுடன் ஒரு பேட்டி

*தமிழகத்தின் பிரபலமான முன்னணிக் கவிஞர்களில் ஒருவரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியருமான திரு. மு. மேத்தா அவர்கள் குமுதம் 27 – 09 – 1990 இதழில் "புலியுடன் ஒருபேட்டி'' என்ற தலைப்பில் எழுதியுள்ளவை இங்கு தரப்படுகின்றது.*

நான்: நலமா புலியே? நான் உன் நண்பன்!

புலி: அறிவேன் கவிஞரே! அறிமுகம் எதற்கு? நீர் எமது திசையை நோக்கித் திரும்பிய உடனே செய்தி வந்துவிட்டது எம் செவிக்கு!

நான்: வாசகர் சார்பிலும் குமுதம் சார்பிலும் வந்திருக்கின்றேன்...

புலி: குமுதமா? அதற்கு என் குரல் பிடிக்காதே! (சிரிப்பு)

நான்: சிரித்தால்கூடச் சீறுவதுபோல் உன் முகத்தில் ஆவேச முகாம்!

புலி: அதனாலென்ன... அச்சமின்றி நீர் எம் அருகில் வரலாம். எதிரிகள், துரோகிகள் இவர்க்குப் புலி நான்! தோழமைத் தோள்களில் தொத்தும் கிளி நான்!

நான்: ஊருக்குள் வராமல் நீ ஒளிந்திருப்பது ஏன்?

புலி: பதுங்கி வாழ்வது பாய்வதற்காக!

நான்: இப்போது நிலைமை எப்படி உள்ளது?

புலி: எப்போதும் போல்தான். களத்தில் இருக்கிறோம்... காட்டில் வாழ்கிறோம். குரூரத் துப்பாக்கிகளால் குறி பார்க்கப்படுகிறோம். போராட்டம் எமது வாழ்க்கையானது! போர்க்களம் எமது குடியிருப்பானது.

நான்: (அருகில் சென்று அதிர்ச்சியுடன்) அடடா... உடலெங்கும் காயங்கள்...

புலி: புராணக் கதைகள் படித்திருக்கிறீர்களா? ஆகாயத்திலிருந்து அடிக்கடி தேவர்கள் பூமழை பொழிவர்! காடையர் இங்கே அப்பாவி ஜீவன்கள் அலறித் துடிக்க தீமழைக் குண்டுகள் தினசரி பொழிவர்! வெட்டிக் குவித்த விறகுகள் மீது பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியதைப் போல்... திசையெல்லாம் எங்கள் பிணங்கள்... அதனால் தேகத்தில், நெஞ்சில், ஆறாத ரணங்கள்!

நான்: கூறுக புலியே! உம் கோரிக்கை என்ன?

புலி; சுதந்திரம். அது எம் இனத்தின் சுவாசம்!

நான்: ஏராளமாய் உமக்கு இழப்புகள்... இல்லையா?

புலி: இழப்பா? எமக்கா? இல்லவே இல்லை! இதுவரை நாங்கள் இழந்திருப்பதெல்லாம் எமது உயிர்களை! எம் ஆயுதங்களை! அந்த நாளிலும் அந்த நிலையிலும் எமது உறுதியை இழக்கவில்லையே!

நான்: கழுத்தில் மரணத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் தீராத போராட்டம் தேவையா புலியே?

புலி: அமைதிப் புறாவாய்ச் சிறகடிக்கத்தான் ஆசை எமக்கும்! வேட்டைக்காரர்கள் விட்டால்தானே...

நான்: வேங்கைப் புலியே! நீதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் என்னவாம்?

புலி: எதை விட்டுக் கொடுப்பது? காமுகனிடத்தில் கற்புக்கரசி எதை விட்டுக் கொடுப்பது? எமது இனத்தையே அழித்திட எழுந்தவரிடத்தில், எமது பற்களைப் பிடுங்கி டாலரில் பதித்து அணிந்து கொள்ள ஆசை கொண்டவரிடம் எதை விட்டுக் கொடுப்பது? இயம்புக கவிஞரே... எப்படி! – எதை - விட்டுக் கொடுப்பது?

நான்: சமரசத்திற்கு நீ இசைந்தால் என்ன?

புலி: சமரச முயற்சிகள் தோற்ற பிறகுதான் சமருக்கு இசைந்தோம்!

நான்: ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றாக உயிர்விட்டது ஏன்?

புலி: வேட்டைக்காரனுக்கும் வேங்கைப் புலிக்கும் ஒப்பந்தம் எப்படி உருவாக முடியும்? அதுவும் அவர்கள் தண்ணீரில் எழுதியல்லவா ஒப்பந்தங்களைத் தயாரிக்கிறார்கள்?

நான்: சரி... சரி... தொடரும் போராட்டத்தில் இன்றைய நிலைமை தோல்வியா? வெற்றியா?

புலி: துடித்தெழும்வேங்கைகள் தோற்பதே இல்லை, வெற்றிபெறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

நான்: சீறவேண்டாம்! சிரிக்கவும் வேண்டாம்... நேரில் இப்போது எதிரில் நிற்கும் நீ நிஜமான புலியா?

புலி: (புன்னகைத்த படி...) இது உயிருள்ள தேகம்! ஏன் சந்தேகம்?

நான்: கொஞ்ச நாள் முன்னர் உன்னைக் கொன்றுவிட்டதாய்க் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்களே...!

புலி: நல்ல நகைச்சுவை! நானும் ரசித்தேன்! எமை வெல்லமுடியாத வீராதி வீரர்கள்-நான் கொல்லப்பட்டதாக கும்மியடித்தனர்! அவர் - தம் ஆசை நிராசை ஆனது! இன்னும் மீசையோடுதான் உலாவுகின்றனர்: (சிரிப்பு)

நான்: இத்தனை எதிர்ப்பு உமக்கு எதனால்?

புலி: புலிகள் யாரையும் அண்டி வாழ்வதும் இல்லை; எவர்க்கும் மண்டியிடுவதும் இல்லை. அதனால்...

நான்: குதறிக் கிழித்து நீ ஒரு சில உயிர்களைக் கொன்று விடுவதாய்க் குற்றம் சாட்டுகிறார்களே?

புலி: புறநானூற்றைப் படித்த கவிஞரே! கொஞ்சம் பகவத்கீதையையும் படித்துப் பாருங்கள்...

நான்: வன்முறைதான் உன் வாழ்க்கை முறையா?

புலி: வாயில் திறந்து வன்முறை தன்னை வா வா என்று யாம் வரவேற்றதில்லையே... திமிர் பிடித்த துப்பாக்கி முனைகளால் வன்முறை எம்மீது திணிக்கப்பட்டது!

நான்: அன்றாடம் உன்னைப் பற்றி அவதூறு பற்பல எழுகின்றனவே, என்ன காரணம்?

புலி: உலக வரைபடத்தில் ஓர் இனம் தன் பெயரை எழுதத் தொடங்குவதை எதிரிகள் கூட்டத்தால் ஏற்க முடியவில்லை. எமக்குப் பின்னே சக்தி திரள்வதைச் சராசரி நரிகளால் சகிக்க முடியவில்லை. அதனால் பொய்யும் புரட்டும் புனைந்த கதைகள் ஏராளமாகவும் தாராளமாகவும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. இதயம் கறுத்த இருட்டு மேகங்கள் 'சோ' வென எங்கும் சொல் மழை பொழிகின்றன!

நான்: இதற்கெல்லாம் முடிவு எப்போது புலியே?

புலி: கிழக்கை என் நகங்கள் கிழிக்கும்! அப்போது உண்மைகள் யாவும் விழிக்கும்!

(புலி கர்ஜிக்கத் தொடங்குறது. ஆகாயப் பாதையில் ஓர் அலறல். விமானத்திலிருந்து எங்கோ குண்டுகள் வீசப்படுகின்றன... வீறு கொண்டு எழுகிறது புலி! வெற்றிபெற வேண்டுமென்று அதை வாழ்த்தி விடை பெறுகின்றேன் நான்.)

# வி.பி.சிங்கின் அரசாங்கத்திற்கு காங்கிரஸ் ஆதரவு வழங்காது

(டில்லி)

தேசிய முன்னணிக் கட்சிக்கு தாம் ஆதரவு வழங்குவதாக இந்திரா காங்கிரஸ் கூறிய போதும் வி. பி. சிங் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக கருத்து வெளியிட்ட வி. என் கார்டியல் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

இதேவேளை வி. பி. சிங் அரசாங்கம் மாற்றுக் கட்சியினரின் ஆதரவினை பெறுவதற்காகவே இரண்டு வாரகாலம் அவகாசம் கேட்டிருப்பதாக இந்திரா காங்கிரஸ் குற்றம் சாட்டி இருக்கிறது.

ஆனால் பிரதமர் வி.பி.சிங் தாம் பதவியை விரும்பியிருந்தால் பாரதீய ஜனதாக்கட்சியுடன் ஒத்துழைத்துச் சென்றிருக்கலாம் என்றும் எல். கே அத்வானியைக் கைது செய்யாமல் விட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார் என்பது தெரிந்ததே.

## விமான விபத்தில் 31 பேர் பலி

(ஹவானா)

கியூபாவின் கிழக்குப் பகுதியில் இடம் பெற்ற விமான விபத்தில் விமானத்திற்சென்ற 31 பேரும் உயிர் இழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான இந்த விமானத்தில் 24 பிரயாணிகளும் 07 விமான உத்தியோகத்தர்களும் இருந்ததாக கியூபாவின் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

## புத்த மடாலயங்களைத் தாக்கிய பர்மிய ராணுவத்தின் செயலுக்கு அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

பர்மாவில் புத்தமடாலயங்கள் பர்மிய இராணுவத்தினரால் தாக்கப்பட்டது குறித்து அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பர்மா இராணுவத்தினர், கம்யூனிஸ கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் எனக் குற்றஞ் சாட்டி புத்தமடாலயங்களை சோதனையிட்டனர்.

அத்துடன் 20 புத்த பிக்குகளையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட புத்த பிக்குகளை இதுவரை அவர்கள் நீதிமன்றங்களிலோ அல்லது இராணுவ நீதிமன்றங்களிலோ கொண்டு வரவில்லை.

பர்மா இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகள் மனித உரிமைகளை மீறும் செயல் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

# கிராமிய வங்கியில் பணமின்மையால்

## ஒய்வூதியக்காரர் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகளில் நடைமுறைப்பணம் இல்லாத நிலையில் அவ்வங்கிகளில் கணக்குவைத்திருக்கும் யாழ். மாவட்ட ஒய்வூதியதாரர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் தமது கடந்த இரண்டு மாதகால ஒய்வூதியங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதற்கு மாற்று நடவடிக்கைகள் ஏதும்இருக்கின்றனவா என யாழ். அரச அதிபரிடம் நேற்று வினவியபோது யாழ். மாவட்டத்திற்குள்நடைமுறையில் இயங்குவதற்கு போதிய பணம் இல்லை. இருந்தும் இலங்கை வங்கிக் கிளைகள் பணக் கொடுப்பனவை ஆரம்பித்ததும் இந்த பணச்சுற்றுகைக்கு வாய்ப்புகள் உண்டு என்றார்.

மேலும் விரைவில் தமக்கு கப்பல் மூலம் கொண்டு வரப்பட இருக்கும் பணத்தை அரச ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்குவதன் மூலம் இந்த ஒய்வூதியதாரருக்கான வங்கிக் கொடுப்பனவுகளை சீர் செய்ய இவ்வழிகளைத்தவிர வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லைஎன்றார் அவர்.

இதேவேளை யாழ். செயலகத்தில் உள்ள ஒய்வூதியப் பகுதிக்கணக்காளர்யாழ். மாவட்டத்தில் உள்ள ஒய்வூதியதாரரின் நிலைமை பற்றிய அறிக்கை ஒன்றை கொழும்புக்கு சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வறிக்கையில் யாழ். மாவட்டத்தில் உள்ள ஒய்வூதியதாரர் கடந்த நான்கு மாதங்களாக ஒய்வூதியம் பெறாத நிலையில் உள்ளனர். இவர்களில் அரைவாசிப் பேர் மட்டும் யூன், யூலை ஆகிய இரண்டுமாத ஒய்வூதியத்தை பெற்றுக் கொண்டுள்ளனர். இதனால் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பின்னணி நிலைமைபற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தற்காலிகமாகஒய்வூதியதாரருக்கு வவுச்சர்களை பணமாக மாற்றும் செயல் திட்டம் பற்றிக்கூறுகையில் இலங்கைவங்கிக்கிளைகள் மற்றைய வங்கிக் காசோலைகளை பணமாக மாற்றும் செயற்பாடுகளை ஆரம்பித்ததும் இக் கஷ்டம் தீரும் என்று கூறினார்.

### குண்டு வீச்சு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் கூறுகையில் அண்மையில் வேலணை உதவி அரச அதிபர்பணிமனையிலும் இதர அரச அலுவலகங்கள் பொது மக்களின் வாழ்விடங்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டதையும், நேற்று முன் தினம் சாவகச்சேரி நகரில் பொதுச் சந்தைமீதும் வர்த்தக ஸ்தாபனங்கள் மீதான குண்டுவீச்சைப் பற்றியும் தெல்லிப்பழை மருத்துவமனைமீதான குண்டு வீச்சுப் பற்றியும் இக் குண்டு வீச்சுகளால் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தமை குறித்தும், காயமடைந்தது குறித்தும், கோடிக்கணக்கான பெறுமதிமிக்க சொத்துக்கள் நாசமானது பற்றியும் எடுத்துச் சொன்னார்.

**மேலும் மருந்து தேவை**

இக்குண்டுவீச்சுக்களால் எமது பிரதேசங்களில் காயமடையும் பொதுமக்களின் தொகை அதிகரித்தமையால் எமது பகுதிக்கு அதிகளவு மருந்துப்பொருள்கள் தேவை எனவும் கூறியுள்ளார்.

**ஊரடங்கால் மக்கள் பாதிப்பு**

இராணுவ தாக்குதல்களாலும் ஊரடங்குச் சட்டத்தாலும் மக்களுக்குத்தேவையான அன்றாட கடமைகளை ஆற்ற முடியாதுபோயுள்ள நிலைமை பற்றியும், கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்ட உணவுப்பொருள்களை இறக்கமுடியாது போயுள்ளமை பற்றியும் அவர் எடுத்துச்சொன்னார்.

**காசு தேவை**

யாழ். மாவட்ட மக்களுக்கு உடனடியாக தமது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய திரவ நிலைப்பணம் தேவை பற்றியும் கூறியுள்ளதுடன் விசேடமாக ஒய்வூதியதாரரின் பிரச்சினை குறித்தும் எடுத்துச்சொன்னார். இதற்கு சரித்த ரத்வத்தை தாம் ஒய்வூதியப் பணிப்பாளருடன் தொடர்புகொள்வதாக உறுதி கூறியதாக யாழ். அரச அதிபர் கூறினார்.

**மின்சாரம் பற்றி**

இதுதவிர யாழ். அரச அதிபர் தொடர்புகொண்ட பின்னர் யாழ். மாவட்ட மின்சார சபை உயர் அதிகாரி எஸ். கந்தசாமியும் சரித்த ரத்வத்தையுடன் தொடர்பு கொண்டார். அவர் டிரான்ஸ்போமர்களுக்கு ஒயில் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்தும் தெரிவித்துள்ளார். இதற்கு அத்தியாவசிய சேவைகள் வடகிழக்குப் பகுதிப் பணிப்பாளர் தேவநேசன் நேசையா பதிலளிக்கையில் தாம் முப்படை இணைப்பு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானிப்பதாகக் கூறினார். (லோ)

## அறிவித்தது போன்று டீசல் வழங்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ அதிகாரிகள் அறிவித்திருந்ததைப் போல உழவு இயந்திரக் காரர்களுக்கு டீசல் வழங்கப் படவில்லை.

இதன் காரணமாக வவுனியா மாவட்டத்தில் காலபோக பயிர்ச் செய்கை கடந்த வருடங்களைப்போன்று துரிதமாக நடைபெறவில்லை.

வன்னிப் பகுதி பிரிகேடியர் சத்தீஸ் ஜெயசுந்தரவினால் வவுனியா உழவு இயந்திரக் காரர்களுக்கு குறிப்பிட்ட அளவில் டீசல் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் இந்த விடயத்தில் வவுனியா அரச அதிபரும், இராணுவ அதிகாரிகளும் எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### அம்பாறையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னது. இவ் வாகனத்தில்வந்த படையினர் அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம். சனிக்கிழமையன்று கஞ்சிகுடிச்ச ஆற்று பகுதியிலும் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே பல மணிநேரம் மோதல் நீடித்துள்ளது. இதே பகுதியில் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளதாகவும் தெரிகிறது.

### காவல் அரண்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலும் மேலும் பல இடங்களிலும் காவல் முகாம்கள் அமைத்துள்ள இராணுவத்தினர் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து மறைந்திருப்பதாகவும், பொதுமக்களை மின் விளக்குகளை அணைத்துவிட்டு நித்திரை செய்யும்படியும் கோருவதாகவும் தெரியவருகிறது. (தி)

### அளுத்தோயாவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் செய்தியைக் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

**கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்**

இத்தாக்குதலில் இராணுவத்தினரிடமிருந்து புலிகளால் பலரக ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ★ ரீ 81-1 ரகத்துப்பாக்கி -02
- ★ மகசீன் -08
- ★ ரவைகள் -213
- ★ கோல்சர் -02
- ★ 303 ரகத்துப்பாக்கி -04
- ★ ரவைகள் -17
- ★ ரிப்பிட்டர்துப்பாக்கி -01
- ★ தோட்டா -04
- ★ கிரனைட் (ஜே. ஆர்) -04
- ★ தொலைத்தொடர்பு சாதனம் -01

## ஹென்றிக்கு அஞ்சலி

(அரியாலை)

சிங்கள இராணுவத்தினருடனான நேரடி மோதலில்வீர மரணமடைந்த விடுதலைப் புலிப் போராளி ஹென்றியின் (பன்னீர்ச்செல்வம்) பூதவுடல் நேற்று பாஷையூர் உதயபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப் பட்டிருந்தது. இன்று காலை பாஷையூர்மக்கள் முன்னேற்றக்கழக அரங்கில் இதற்கென அமைக்கப்பட்ட விசேட மேடையில் பொதுமக்கள்அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் நடைபெறவுள்ள இரங்கல் கூட்டத்தின்பின் மாவீரர்களுக்காக அமைக்கப்பட்ட விசேட இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும். இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஈச்சமோட்டை, பாஷையூர் பகுதிகள் முழுவதும் கறுப்புக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டு சோககீதம் இசைத்த வண்ணமுள்ளன.

## பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(அராலித்துறை)

அராலித்துறை கடற் பகுதியில் படகில் சென்ற பயணிகள் மீது சிறிலங்கா விமானப் படை ஹெலிகொப்டரில் இருந்து கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது பயணிகள் கடலுக்குள் பாய்ந்து உயிர் தப்பிக்கொண்டனர். (க)


### கல்வித்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி பிற்பகல் 3.00 மணியளவில் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்பி விடுகின்றனராம்.

இத் திணைக்களத்திலிருந்து பல ரூபா பெறுமதியான பொருள்களும், ஆவணங்களும் சூறையாடப்பட்டமை தெரிந்ததே.

இதே சமயம், வவுனியா மாவட்டத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட தினங்களில் ஊதியப் பணம் வழங்கப்படுவதில்லை என்றும், பல மைல் தூரத்திலிருந்து வந்து சம்பளப் பணம் பெற முடியாமல் ஆசிரியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)




## தீவுப்பகுதிக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்வந்தது

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள மக்களுக்கான உணவு மற்றும் பொருட்களை ஏற்றிக் கொண்டு வேறு ஒரு கப்பல் கடந்த ஞாயிறு நயினாதிவு தெற்குக் கடற்பிராந்தியத்தில் நங்கூரம் இட்டு நிற்கின்றது.

இவ்வாறு கடற்பிராந்தியத்தில் நிற்கும் இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கி நயினாதீவில் உள்ள அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தில் களஞ்சியப் படுத்தி வைத்து பின்னர் மக்களுக்கு விநியோகிப்பதற்கானஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற மாதம் சிங்கப்பூர் கப்பலான ''அமேசன்'' கப்பலில் உணவுப் பொருள்கள் கொண்டு வரப்பட்டு தீவுப் பகுதி மக்களுக்கு விநியோகிக்கப் பட்ட பொழுதிலும் ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள மக்களுக்கு இப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

### சிங்களவர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது. இன்றும் திருக்கோணமலை மாவட்டத்தில் மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்ற போர்வையில் சிங்கள மக்களுக்கு மேலதிக உதவிகள் வழங்குவதையே செய்துவருகின்றது. அதாவது திருக்கோணமலை மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தைத் தீவிர முயற்சி எடுக்கப்போவதாகச் சொல்வதெல்லாம் தீவிர சிங்கள மயமாக்கல் திட்டத்தையே குறிப்பதாகும்.

தமிழ் அரச உத்தியோகத்தர்களைக் கடமைக்குத்திரும்பும்படி பகிரங்கமாக அழைப்பு விடப்படும் அதே சமயம் பச்சைநூல் அகதிமுகாமில் சம்பளம் தரப்போவதாக வதந்தியைக் கிளறிவிட்டதால் அலுவலகத்திற்குச் சென்ற 35தமிழ் அரச உத்தியோகத்தர் இராணுவத்தால் கைது செய்யப் பட்டனர். இதேவேளை தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு பதவி காலியானது என அறிவித்துவிட்டு சிங்கள, முஸ்லிம் உத்தியோகத்தர்களால் அவ் இடங்கள் நிரப்பப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

திரு. ரூபன் அவர்கள் ஈழநாதத்திற்கு வழங்கிய விசேட செவ்வியின் முழு விபரமும் நாளைய ஈழநாதம் இதழில் வெளியிடப்படும்.

### தெல்லிப்பழை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெயர்ந்த மக்களுக்கு உடுவிலில் விசேடமாக அமைந்துள்ள தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் நிவாரணக் கொடுப்பனவுகளின் நிலைமை பற்றியும் அவர் பார்வையிட்டார். யாழ். அரச அதிபருடன் யாழ். செயலக பொதுசன தொடர்பு அதிகாரி எஸ். ஐ. நித்திய ராஜாவும் சென்றிருந்தார். (லோ)

### மேஜர் ஹென்றி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரமரணமடைந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் காயமுற்ற சேகரன் நேற்று முன் தினம் வீர மரணமடைந்துள்ளார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## தொடர்ந்தும் வீடுகள் தகர்ப்பு

நேற்று இரண்டாவது நாளாகத்தொடர்ந்து மாவிட்டபுரம் பகுதியில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் தமக்கு அயலில் உள்ள வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்த வண்ணம் உள்ளனர்

நேற்றுக் காலையிலிருந்து 5ற்கும் மேற்பட்ட வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இக் குண்டுகள் அப்பகுதியையே அதிரவைத்தன. (ச)

## யாகப்பர் ஆலயத்திற்கு 12லட்சம் நட்டம்

நடைபெற்ற இராணுவத் தாக்குதல்களால் புனிதயாகப்பர் ஆலயத்திற்கு ரூபா 12 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பங்குத் தந்தை வண-பிதா டி. எம். இம்மனுவேல் அடிகள் தெரிவித்தார்.

கடந்த நான்கு மாதங்களிலும் ஐந்து தடவைகளுக்கு மேலாகஆலயம் தாக்கப்பட்டதாகவும், பதினொரு ஷெல்கள் ஆலயத்தில் விழுந்து வெடித்து சேதங்கள் ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆலய தின் கூரைகள், தூண்கள், மணிக்கோபுரங்கள், போட்டிக்கோ, டோம் என்பனவும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும் அடிகளார் மேலும் கூறினார். (21)

## கடமைக்கு சமூகம் தரவும்

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் அங்குகடமையாற்றும் அனைத்து தொலைத் தொடர்பு ஊழியர்களையும் இன்று காலை 9 மணிக்கு தங்களது உத்தியோக அடையாள அட்டையுடன்தவறாது சமுகமளிக்குமாறு அதற்குப் பொறுப்பான தொலைத் தொடர்பு பரிசோதகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### புலிகளுடன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணைகளை மேற்கொள்ள விசாரணைக்குழு அமைக்கப் படவேண்டும் எனக் கோரினார். வாசுதேவநாணயக்கார பேசுகையில் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கூடத் தற்சமயம் காணாமற் போய் விடுவதாக வருத்தம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.